**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR**

| | | |
|---|---|---|
| CC | : | 559/2024 |
| Deposition of Witness for | : | PW. 5 (LW-3) |
| Name | : | திரு.பாலமுருகன் |
| Father’s Name | : | பாலசந்திரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர். |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 26th day of February 2026.**

**முதல் விசாரணை :-**

நான் கரூர் தேர்வீதி அர்ச்சனா ஹோட்டல் எதிரில் வசிக்கின்றேன். எனது தகப்பனாருடன் தொழிலில் உதவி புரிந்து வருகின்றேன். கடந்த 06.05.2024-ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் நானும், எனது தகப்பனாரும் இரு சக்கர வாகனத்தில் காளிபாளையத்திலிருந்து கரூர் செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு முன்னால் ஒரு இரு சக்கர வாகனம் சென்று கொண்டிருந்தது. அந்த வாகனத்தின் பதிவு எண்.TN 47 P 7531 ஆகும். எனது தகப்பனாருக்கு தெரிந்த பிரபாகரன் என்பவர் அந்த வாகனத்தை ஓட்டிக்கொண்டு சென்றார். காளிபாளையம் அருகே எங்களுக்கு முன்பு சென்ற அந்த வாகனத்தின் மீது அதற்கு பின்பு வந்த TN 47 BV 0385 என்ற பதிவெண் கொண்ட வாகனம் அதிவேகமாக வந்து மோதி விபத்து ஏற்பட்டது. ஆஜர் எதிரிதான் யமாகா வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆவார். விபத்தில் பிரபாகரன் என்பவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. நானும், எனது தகப்பனாரும் ஆம்புலன்சிற்கு போன் செய்து காயம்பட்ட பிரபாகரன் என்பவரை கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். எனது தகப்பனார் பிரபாகரன் வீட்டிற்கு செல்போன் மூலம் தகவல் தெரிவித்தார். பிரபாகரன் என்பவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது இறந்துவிட்டதாக தெரிய வந்தது. மறுநாள்தான் பிரபாகரன் என்பவரின் பிரேதத்தை மருத்துவமனையில் பார்த்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :—

நான் பயணம் செய்த வாகனம் TVS XL வாகனம் ஆகும். எனது தகப்பனார் ஓட்டிக் கொண்டு சென்றார். நான் பின்னால் அமர்ந்து சென்றேன். விபத்து சமயத்தில் என்னையும், எனது தகப்பனாரையும் தவிர மேலும் பொது நபர்கள் இருந்தார்கள். எவ்வளவு நபர்கள் இருந்தார்கள் என்று சரியாக நினைவில்லை. நான் போலீஸ் விசாரணையில் கரூரிலிருந்து நெரூர் செல்லும்போது விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. யமாகா வாகனம் வேகமாக சென்றது என்று யூகத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் அவ்வாறு இல்லை.

விபத்தில் எதிரிக்கு காயம் ஏற்பட்டதாக என்று நினைவில்லை. எதிரி கவனமாகத்தான் வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரியல்ல. எதிரி வாகனத்தை அதிவேகமாக ஓட்டி சென்றார் என்றால் சரியல்ல. பிரபாகரன் என்பவர் எந்த சமிக்கையும் செய்யாமல் திடீரென்று வலது பக்கம் திரும்பியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |